# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2008 செப்டம்பர் திங்கள் 23 –ாம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் 2008–ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு.

அ.குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 645 : ஆணையர் பொறுப்பேற்ற (திரு.மு.லோகநாதன்) நாள்முதல் இந்நாள்வரைக்கும், ஜுன்2008 நாட்குறிப்பினைத்தவிர ஏனைய மாதங்களின் நாட்குறிப்பினை மன்றத்திற்கு வைத்திடவில்லை. எனவே அடுத்த சாதாரணக்கூட்டத்தில் இந்நாள்வரையான மாதாந்திர நாட்குறிப்பினை வைத்திட மன்றம் கேட்டுக்கொள்கிறது. பொருள் ஒத்திவைக்கப்படுகிறது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் 06.08.2008 முதல் 29.08.2008 முடிய செலவு செய்யப்பட்ட கீழ்க்கண்ட செலவினச் சீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கு.

(1) பொது நிதி : செலவுச்சீட்டு எண்கள் : 218, 219, 221, 224, 228, 229, 233, 234, 235, 236, 237, 238, 239, 240, 241, 245, 246, 250, 253, 254, 255, 256, 258, 259, 262, 263, 265, 269.

(2) சேமநலநிதி : செலவுச்சீட்டு எண்கள் : –

அ.குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 646 : பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண் : 3**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. வெ.கண்ணையா | நகராட்சி பொறியாளர் | 6/2008<br>7/2008 | ரூ.4386/–<br>ரூ. 4541/– |
| 2 | திருமதி. எஸ். சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 7/2008<br>8/2008 | ரூ.1424/–<br>ரூ. 2566/– |
| 3 | திரு.எஸ். ராபின் சுந்தர்சிங் | கணனி புள்ளி விபரத் தொகுப்பாளர் | 8/2008 | ரூ. 1360/– |
| 4 | திருமதி. கே. மீனாம்பாள் | மகப்பேறு உதவியாளர் | 5/2008<br>6/2008 | ரூ.141/–<br>ரூ.141/– |

அ.குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண். 647 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் இரண்டு மினிலாறி ஓட்டுனர் பணியிடத்துக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 65708/08/ஜே3 நாள் 06.06.2008–ல் வழங்கப்பட்ட அனுமதி 30.09.2008–ல் முடிவடைவதால் மேலும் 01.10.2008 முதல் ஓராண்டு நீடித்து கொள்ள அனுமதித்து பிரேரணைகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : சுனாமியால் பாதிக்கப்பட்ட குளச்சல் நகருக்கு நகரின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு பொது சுகாதார பணிகளுக்கு இப்பணியிடம் அவசியம் தேவைப்படுவதால் 01.10.2008 முதல் மேலும் ஓராண்டிற்கு நீடிக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண். 1203/94/சி1)

**தீர்மானம் எண். 648 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நெசவாளர் தெருவின் நடுப்பகுதியில் அமைந்துள்ள 7 மின்கம்பங்களை தெருவின் ஓரமாக மாற்றியமைக்க மதிப்பீட்டு கட்டணம் ரூ. 38,650/– (ரூபாய் முப்பத்தி எட்டாயிரத்து அறுநூற்றி ஐம்பது மட்டும்) செலுத்தக் கேட்டு தமிழ்நாடு மின்சார வாரிய இளநிலைப் பொறியாளர், குளச்சல் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகை செலுத்துவதற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : நகர்மன்ற தீர்மானம் எண். 513 நாள் 31.03.2008–ல் சம்மந்தப்பட்ட 7 மின்கம்பங்களை மாற்றியமைக்க மன்றம் தீர்மானித்துள்ளபடியால் மேற்படி தொகை ரூ. 38,650/– ஐ மின்வாரியத்திற்கு செலுத்த மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 649 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான மாதா காலனி மற்றும் நெசவாளர் தெருவின் தெற்குப் பகுதி ஆகிய இடங்களில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் வால்வுகள் பழுதடைந்துள்ளதால் குடிநீர் விநியோகம் சம்மந்தப்பட்ட பகுதிகளில் சரிவர செய்ய இயலவில்லை. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இரண்டு வால்வுகளை உடனடியாக சரி செய்யவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ. 5000/– க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 650 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

குளச்சல் நகராட்சியால் தொழில் வரி திருத்தியமைக்கப்பட்டு 30.08.2008–வுடன் ஐந்து ஆண்டுகள் முடிவடைகிறது. 1920–ம் ஆண்டின் திருத்தப்பட்ட மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1998 பிரிவு 124 (டி) இன் உட்பிரிவு 13 மேற்படி சட்டம் (2) –ன்படி அரசு விதித்துள்ள தொழில் வரி திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 1999 பிரிவு 16 மற்றும் 17–ன்படி தொழில்வரி விகிதங்களுக்கு பிரதி ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில் வரியினை திருத்தியமைக்க வேண்டும். அதன்படி குறைந்தபட்சம் 25 சதவீதமும், கூடுதலாக அதிகபட்சம் 35 சதவீதமும் கணக்கிட்டு நிர்ணயம் செய்யலாம் என்று நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 38714/2008/ஆர்1 நாள் 13.08.2008–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 25 சதவிகிதம் அதிகரித்து நிர்ணயித்த கட்டண அமைப்பு (Slab) அடிப்படையில் ஏற்கெனவே விதித்த வரிவிகிதங்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட வரிவிகிதமும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண். | அரையாண்டு வருமான வரம்பு | தற்போதைய வரி | 01.10.2008 முதல் திருத்தியமைக்கப் பட்ட 25 சதவீத கட்டணம் | 01.10.2008 முதல் திருத்தியமைக்கப் பட்ட 35 சதவீத கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | 21,000 வரை | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | 21,001 முதல் 30000 வரை | 75 | 94 | 101 |
| 3 | 30001 முதல் 45000 வரை | 188 | 235 | 254 |
| 4 | 45001 முதல் 60000 வரை | 375 | 469 | 506 |
| 5 | 60001 முதல் 75000 வரை | 563 | 704 | 760 |
| 6 | 75001 முதல் அதற்கு மேல் | 750 | 938 | 1013 |

**அ.குறிப்பு** : அரசு ஆணையில் குறைந்தபட்சம் 25 சதவீதத்திற்கு குறையாமலும், 35 சதவீதத்திற்கு மிகாமலும் உயர்வு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 651 : 25%உயர்வு செய்திட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 8</u>**

இந்நகராட்சி மினிலாறி டி.என்.74—5507 —க்கு உதிரி பாகங்கள் பழுதடைந்ததை சரி செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணி முடித்ததையும், பணி முடித்தமைக்கான தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு.

**<u>அ.குறிப்பு</u>** : அவசர அவசியம் கருதி இந்நகராட்சி மினி லாரி டி.என். 74—5507 —க்கு பழுதுகள் சரி செய்ய நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணி முடித்ததையும், மேற்படி பணிக்கான செலவுத் தொகையை வழங்கவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 652 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 9</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் 4 துப்புரவு பணியாளர்கள் பணியிட அனுமதி 31.12.2008—ல் முடிவடைவதால் 01.10.2009 முதல் தொடர்ந்து நிரந்தரமாக நீட்டித்து வைத்துக் கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : இப்பணியிடத்தை 01.01.2008 முதல் 31.12.2008 வரை நீட்டித்து வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மேலும் 01.01.2009 முதல் தொடர்ந்து நிரந்தரமாக நீட்டித்துக் கொள்ள உரிய அனுமதியினை வழங்க நகராட்சி நிர்வாக ஆணையரைக் கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 653 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2008 செப்டம்பர் திங்கள் 23 –ாம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/3232/2008 நாள் 23.08.2008–ல் குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2008–2009–ன்கீழ் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இலப்பவிளை அரசு உயர்நிலைப்பள்ளியில் சத்துணவுக்கூடம், சமையலறை புதிய கட்டிடம் கட்டுவதற்கு ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 654 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/3232/2008 நாள் 23.08.2008–ல் குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2008–2009–ன்கீழ் (1) குளச்சல் நகராட்சி குளச்சல் கடற்கரையில் மீனவர் ஓய்வுக்கூடம் கட்டுதல் ரூ. 2.50 இலட்சம் (2) குளச்சல் நகராட்சி 2–வது வார்டு தும்பக்காட்டுவிளை பகுதியில் சிமென்ட் தளம் அமைத்தல் ரூ. 2.00 இலட்சம் மற்றும் குளச்சல் அண்ணாசிலை சமீபம் பயணிகள் நிழலகம் கட்டுதல் ரூ. 2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 655 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

நகர்மன்ற தீர்மானம் எண். 628 நாள் 18.08.2008–ல் மாதாகாலனி பகுதியில் சுனாமி திட்டத்தின்கீழ் மூன்று இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்தேக்கத் தொட்டிக்கு குடிநீரேற்றும் குழாய்கள் சீம்பிளிவிளை, பாலத்தன்கரை, வெள்ளிப்பிள்ளையார் கோயில் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணறுகளிலிருந்து மேற்படி மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வரை அமைப்பதற்கும், இது தொடர்பான வால்வுகள் மற்றும் உதிரி பாகங்கள் ஆகியவை வாங்கி பொருத்துவதற்கும், இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 5,40,000/– யும் அங்கீகரித்ததன் அடிப்படையில் 18.09.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு.C. சந்திரசேகர் ஒப்பந்தக்காரர் | – | 4.83% மதிப்பீட்டைவிட அதிகம். (ரூ. 5,04,271.00) |
| 2) | திரு. பி.தங்கமணி, ஒப்பந்தக்காரர் | – | 7.93% மதிப்பீட்டைவிட அதிகம். (ரூ. 5,19,218.00) |

இதில் திரு.சி.சந்திரசேகர் என்பவர் 4.83% மதிப்பீட்டைவிட அதிகமாக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 656 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 4</u>**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு மினி டிப்பர் லாரி எண்.TN.74.T 5508 –க்கு காப்பீட்டுக் கட்டணம் ரூ. 11.246/– காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : அவசர அவசியத்தின்பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ரூ.11,246/–க்கான காசோலையினை காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 657 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 5</u>**

குளச்சல் நகராட்சி 10–ம் வார்டு உறுப்பினர் இடைத் தேர்தல் தொடர்பாக வாக்காளர் பட்டியல் அச்சடித்த வகையிலும், தேர்தல் தொடர்பான படிவங்கள் அச்சடித்த வகையிலும், வாக்குச் சாவடியில் பயன்படுத்தப்படும் துண்டுச் சீட்டுகள், டெண்டர் வாக்குச் சீட்டுகள், தேர்தல் பணி தொடர்பான இதர பொருட்கள் மற்றும் ஒளி அமைப்புகள் ஏற்பாடு செய்த வகையிலும், தேர்தல் அலுவலர்களுக்கும், வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கும் ஊதியம் வழங்கிய வகையிலும் ரூ.6,000/– வழஙக வேண்டியுள்ளது. எனவே மேற்படி செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : அவசர அவசியத்தின் பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சம்மந்தப்பட்டவர்களுக்கு தொகை வழங்கியதையும் அதற்கான செலவினத் தொகை ரூ. 6,000/– யும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 658 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 6</u>**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் பிரிவு ஆழ்துளை கிணறு எண்கள். 6, 8, 11 மற்றும் 12 ஆகியவற்றின் இரும்புக் குழாய்கள் ஓட்டை ஏற்பட்டுள்ளதால் அதனை மாற்றியமைப்பதற்கும், ஆழ்துளை கிணறு எண்கள் 6, 8, 12 ஆகியவற்றில் நீழ் மூழ்கி மின் மோட்டார்களை சரி செய்வதற்கும், இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 47,000/–க்கும் மன்றம் ஒப்புதலளித்ததன் பேரில் நகர்மன்றத் தீர்மானம் எண். 629 நாள் 18.08.2008) 10.09.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு.C. சந்திரசேகர் ஒப்பந்தக்காரர் | – | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு (ரு. 46,027.00) |
| 2) | திரு. பி.தங்கமணி, ஒப்பந்தக்காரர் | – | 6.74% மதிப்பீட்டைவிட அதிகம். (ரு.49,140.00) |

இதில் திரு.சி.சந்திரசேகர் என்பவர் 0.02% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அஙகீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 659 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 7</u>**

குளச்சல் நகராட்சிப் பகுதியில் சாஸ்தாங்கரை பிரதான சாலையில், வெள்ளியாகுளம் அருகில் மின்கம்பம் எண். FII/88 முதல் FII/121 வரையில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாமல் உள்ளது. மேலும் ஆசாத் நகரில் மின்கம்பம் எண். FII/9 முதல் FII/11 வரையிலும் குடிநீர் பகிர்மான குழாய் இல்லை. மேலும் துறைமுக தெருவில் புனித மேரி பள்ளிக்கூடம் அருகில் மின்கம்பம் எண். FII/3 முதல் வீட்டு எண். 15/18 வரையிலும் குடிநீர் பகிர்மான குழாய் இல்லை. ஆகவே மேற்கண்ட பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகர்மன்ற தலைவரால் அறிவுறுத்தப்பட்டதன் பேரிலும், பகிர்மான குழாய் இணைப்பு வழங்கி குடிநீர் சீராக வழங்க இயலும் என்பதாலும் தளம் ஆய்வு மேற்கொண்டு மேற்கண்ட பகுதிகளில் 63 mm dia pvc பகிர்மான குழாய் அமைப்பதற்கும், இதற்கான உத்தேச மதிப்பீடு ரு. 58,000/–க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 660 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 8**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண். TN.74.V.3530 கடந்த 2005 நவம்பர் மாதம் வாங்கப்பட்டது. மேற்படி வாகனம் வாங்கி 33 மாதங்கள் ஆகிவிட்டன. சுமார் 74,000 கி.மீ. தூரம் ஓடியுள்ளது. இதன் காரணமாக நான்கு டயர்களும் முழுமையாக தேய்ந்து சரிவர ஓட்ட இயலாமல் உள்ளது. எனவே சம்மந்தப்பட்ட நான்கு டயர்களையும் மற்றும் அதற்கான டியூப்களையும் மாற்றுவதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 22,000/—க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 661 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 9**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.40051/08/இ3 நாள் 01.09.2008—ல் குளச்சல் பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்தின் முன்புற வாயிலில் அமைந்துள்ள கண்ணதாசன் சாலை முகப்பில் ஆர்ச் அமைக்க அவசியத்திற்கான, நியாயமான காரணங்கள் நகர்மன்றத்தின் மூலம் அளிக்கப்பட்டு அதற்கான அறிக்கையினை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (Further the need for the construction of an arch at Kannadhasan Salai may be justified by the council and report the fact to this office) விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 662 : குளச்சல் நகரம் Heritage town ஆக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில், சுற்றுலாவை ஊக்கப்படுத்துகின்ற வகையில் அரசு புராதன நகரத் திட்டத்தின்கீழ் 2005 ஆம் ஆண்டு இந்நகருக்கு ரூ. 30 இலட்சம் மானியமாக கொடுத்து, சுற்றுலாதாரரை கவருகின்ற வகையில் வளர்ச்சிப் பணிகளை நகராட்சி மேற்கொண்டுள்ளது. மேலும் நகரம் முழுமைக்கும் முக்கிய சாலையில் நடைபாதை மட்டும், Hand Rails அமைப்பதற்கு 2007—2008—ம் ஆண்டு புராதன நகரத் திட்டத்தின்கீழ் ரூ.50 இலட்சம் நகராட்சியால் கேட்கப்பட்டுள்ளது. புராதன நகரம் சுற்றுலாதாரரை கவருகின்ற வகையில் இம்முகப்பின் தேவை குளச்சல் நகருக்கு மிக அவசியம் என மன்றம் கருதுகின்றதால், இதனை அனுமதித்திட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டு ஏகமனதாகத்தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 10**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.40051/08/இ3 நாள் 01.09.2008—ல் குளச்சல் பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்தின் முன்புற வாயிலில் அமைந்துள்ள சேதமுற்ற மூன்று தூண்களையும் இடித்து மாற்றுவதற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். எனவே மேற்படி மூன்று தூண்களையும் இடித்து அப்புறப்படுத்துவதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 15,000/—க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 663 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 11**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4067/08/சி1 நாள் 23.07.2008—ல் குளச்சல் நகராட்சிக்கு சொர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 1,74,000/— நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.. அதன்படி நகர்மன்றத் தலைவர் அவர்களுடன் தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இக்பால் தெரு குறுக்கு தெருவில் ஓடையுடன் கூடிய சிமெண்ட் தளம் மற்றும் மேலத்தெரு குறுக்குத் தெருவில் மழைநீர் ஓடை மற்றும் துறைமுகத்தெரு படிப்பகம் அருகில் மழைநீர் ஓடை கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கும், இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.1,75,000/—க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 664 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 12</u>**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தின் முதல் மாடியில் கதவு எண். 60 முதல் 64 வரை மற்றும் கடை எண். 33 முதல் 37 வரையிலுள்ள 10 கடைகளை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். (63206/2007/ஆர்3 நாள் 26.12.2007–ல்) ஒதுக்கீடு செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு மாத வாடகையாக மேற்படி 10 கடைகளுக்கும் சேர்த்து ரூ. 7020/– வீதம் வசூலிக்கவும், அதன் பின்பு குத்தகை நிபந்தனைகளின் பேரில் 15 சதவீதம் உயர்வு செய்து வசூலிக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பி.எஸ்.என்.எல். பொது மேலாளர், நாகர்கோவில் அவர்களின் 15.09.2008–ம் நாளைய கடிதம் (பி.38/எஸ்.டி.இ.ஆபீஸ், குளச்சல்/2008/60 –ல் மேற்படி 10 கடைகளுக்கும் சேர்த்து ரூ. 5620/– மட்டும் வழங்க இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

**அ.குறிப்பு** : பொது ஏலத்திற்கு கடை 1–க்கு ஓராயிரம் வீதம் 10 கடைகளுக்கும் டுபிட்கோ நிர்ணயித்த மொத்த வாடகை ரூ. 10,000/– நகராட்சி நிர்வாக ஆணையரால் மாத வாடகை ரூ. 7020/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் அவர்கள் மாத வாடகையாக ரூ. 5620/– வழங்க இயலும் எனவும் தெரிவித்துள்ளனர். இதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒப்புதல் பெற வேண்டும். மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண். 665 : நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் நிர்ணயம் செயதுள்ள வாடகைத் தொகையினை ஏற்றுக்கொள்ள BSNL நிறுவனத்துடன் நகர்மன்றத் தலைவர் மற்றும் ஆணையர் உட்பட நகராட்சி நிர்வாகம் கடந்த எட்டு மாதங்களாக நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின்னர் அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி மாதாந்திர வாடகைத் தொகையாக ரு.5620/– மட்டும் தர இயலுமென கூறியுள்ளனர். இதற்கு மேலும் பேசுவதில் பிரயோஜனமில்லை என்று மன்றம் கருதுவதாலும், அவ்வாறு மேலும் வலியுறுத்தப்படும் பட்சத்தில் அவர்கள் வேறு தனியார் கட்டிடஙகளை குறைந்த வாடகைக் கட்டணத்தில் நாடுவதற்கு வாய்ப்பு உள்ளதாலும், BSNL –ன் Customer service center –ன் தேவை வளர்ச்சியடைந்து வரும் குளச்சல் நகருக்கு மிகவும் அவசியம் என்பதாலும், இதனை ஏற்றுக் கொண்டிட நகராட்சி மன்றம் நகராட்சி நிர்வாக ஆணையரை கேட்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 13</u>**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தின் கீழ் தளத்தில் கதவு எண். 12 மற்றும் 13 கடைகளையும், மேல் தளத்தில் 44, 45, 46 மற்றும் 53 எண் கடைகளையும் தமிழ்நாடு மின்சார வாரிய மின்வினியோக பிரிவிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். (46026/2007/ஆர்3 நாள் 28.12.2007–ல்) ஒதுக்கீடு செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு மாத வாடகையாக மேற்படி 6 கடைகளுக்கும் சேர்த்து ரூ. 6530/– வீதம் வசூலிக்கவும், அதன் பின்பு குத்தகை நிபந்தனைகளின் பேரில் 15 சதவீதம் உயர்வு செய்து வசூலிக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், வினியோகம், தக்கலை அவர்களின் 10.09.2008–ம் நாளைய கடிதம் செ.பொ./வி/தக்/க.மே./இ.நி.உ.உ/எண்.766 –ல் மேற்படி 6 கடைகளுக்கும் சேர்த்து ரூ. 4500/– மட்டும் வழங்க இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

**அ.குறிப்பு** : பொது ஏலத்திற்கு கடை 1–க்கு கீழ்தளத்தில் ரூ.1500/– வீதமும், மேல்தளத்தில் கடை ஒன்றிற்கு ரூ. 1000/– வீதமும் 6 கடைகளுக்கும் டுபிட்கோ நிர்ணயித்த மொத்த வாடகை ரூ. 7,000/– எனவும், நகராட்சி நிர்வாக ஆணையரால் மாத வாடகை ரூ. 6530/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், வினியோகம், தக்கலை அவர்கள் மாத வாடகையாக ரூ. 4500/– வழங்க இயலும் எனவும் தெரிவித்துள்ளனர். இதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒப்புதல் பெற வேண்டும். மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.666: நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் நிர்ணயம் செயதுள்ள வாடகைத் தொகையினை ஏற்றுக்கொள்ள TNEB நிறுவனத்துடன் நகர்மன்றத் தலைவர் மற்றும் ஆணையர் உட்பட்ட குழு கடந்த எட்டு மாதங்களாக நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின்னர் TNEB விதிகளின்படி மாதாந்திர வாடகைத் தொகையாக ரு. 4500/– மட்டும் தர இயலும் எனக் கூறியுள்ளனர். இதற்கு மேலும் பேசுவதில் பிரயோஜனமில்லை என்று மன்றம் கருதுவதாலும், மேலும் வலியுறுத்தும் பட்சத்தில் அவர்கள் வேறு தனியார் கட்டிடஙகளை, குறைந்த வாடகைக் கட்டணத்தில் நாடுவதற்கு வாய்ப்பு உள்ளதாலும், TNEB அலுவலகம் நகர மையப்பகுதியில் அமைய வேண்டும என்பது வளர்ந்து வரும் குளச்சல் நகருக்கு மிக அவசியம் என்பதாலும், இதனை ஏற்றுக் கொண்டிட நகராட்சி நிர்வாக ஆணையரை கேட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 14</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சர்வே எண்.C2-1/7–ல் ஆசாத்நகரில் வசிக்கும் திரு.முகம்மது மன்சூர் மகன் திரு. முகம்மதுசாலி, திரு. முகம்மது கண் அவர்கள் மனைவி திருமதி. குறைஷா பீவி, திரு. ஆதம் அலர்கள் மகன் திரு. பகறுதீன் சாகிப், திரு. அப்துல் அமீது அவர்கள் மனைவி திருமதி. மறியம் பீவி திரு. அப்துல் றகுமான் அவர்கள் மனைவி திருமதி. மைமூனும்மாள் திரு. முகம்மதுசாலி அவர்கள் மகன் மீராசா, திரு. முகம்மது அப்துல் காதர் அவர்கள் மகன் திரு. தாஹா ஆகியோர்கள் சேர்ந்து தங்களுக்கு உரிய பட்டா நிலத்தில் உள்ள நடைபாதையை நகராட்சி பொது சாலைக்கு வேண்டி நகராட்சி ஆணையாளர் அவர்கள் பெயரில் தானமாக எழுதி கொடுத்துள்ளார்கள். மனுதாரர்களுக்குரிய பட்டா நிலத்தை நகராட்சியின் சொத்தாக எடுத்துக் கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 667 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 15</u>**

புதிய அங்கன்வாடி மையங்கள் கீழ்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (1) பர்னட்டிவிளை, (2) ஆசாத்நகர், (3) குழந்தை யேசு நகர் மேற்படி மையங்கள் பாதுகாப்பற்ற தனியார் கட்டிடங்களில் வராண்டாக்களில் தற்காலிகமாக இயங்கி வருகின்றன. மேற்படி மையங்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் நிரந்தர கட்டிடம் அமைப்பதற்கு தேவையான இடவசதி கேட்டு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட மாவட்ட அலுவலர் அவர்கள் குளச்சல் நகராட்சி ஆணையருக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அ,குறிப்பு** மேற்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் மேற்படி அங்கன்வாடி மையங்கள் அமைப்பதற்கு நகராட்சி நில அளவையர் மூலம் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பகுதிகளில் நாடாளுமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நிதி உதவி கோரி மன்றம் தீர்மானிக்கலாம்.

**<u>தீர்மானம்</u>** எண். அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் எண். 668 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 16</u>**

**<u>நகர்மன்றத்தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.</u>**

கடல் உயர் அலை மட்டத்திலிருந்து 1000 மீட்டர் தூரத்திற்குள் அமைந்திருக்கும் ஊறுபடத்தக்க வீடுகளை மாற்றியமைக்கும் அரசு திட்டத்தின்கீழ் குளச்சல் நகராட்சி பொட்டல் புறம்போக்கு பகுதியில் குடிசைகள் அமைத்து சுமார் 30 வருடங்களுக்கு மேல் வாழ்ந்து வரும் கீழ்குறிப்பிட்டுள்ள 9 பயனாளிகளுக்கு அரசு புதிய வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. .

1) திருமதி. தங்கம்மான், க/பே. தங்கராஜ், 3/1,E. பொட்டல், பர்னட்டிவிளை, குளச்சல்.
2) திருமதி. மனோன்மணி, க/பெ. ஜார்ஜ், 9/7.பி. பொட்டல், பர்னட்டிவிளை, குளச்சல்.
3) திருமதி. ராணி, க/பெ. வில்சன், 3/13.எ. பொட்டல், பர்னட்டிவிளை, குளச்சல்.
4) திருமதி. ராணி. க/பெ. கதிரேசன், 3/1.எப். பொட்டல், பர்னட்டிவிளை, குளச்சல்.
5) திருமதி. லீலாபாய், க/பெ. பங்கிராஜ், 2/4. பொட்டல், பர்னட்டிவிளை, குளச்சல்.
6) திருமதி. அன்னலெட்சுமி, க/பெ. மனோகரன், 3/1.எப். பொட்டல், பர்னட்டிவிளை, குளச்சல்.
7) திருமதி. தயாகுமாரி, க/பெ. லெட்சுமணன், 3/1.எப். பொட்டல், பர்னட்டிவிளை, குளச்சல்.
8) திருமதி. ராதா, க/பெ. நாகராஜன், 3/1 எப்1 பொட்டல், பர்னட்டிவிளை, குளச்சல்.
9) திருமதி. சுசீலா, க/பெ. தங்கமாண்டி, 3/13.பி. பொட்டல், பர்னட்டிவிளை, குளச்சல்.

மேலும் இதே பகுதியில் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேல் ஊறுபடத்தக்க வீடுகளில் வாழ்ந்து வரும் கீழ்குறிப்பிட்டுள்ள ஐந்து பயனாளிகள் மாற்று வீடுகள் கேட்டு விண்ணப்பித்துள்ளனர்.

1) திருமதி. சைனபாபீவி, க/பெ. முஸ்தபா, 3/1ஜே. பொட்டல், பர்னட்டிவிளை, குளச்சல்.
2) திருமதி. கிரேசி, 3/1.கே. பொட்டல், பர்னட்டிவிளை, குளச்சல்.
3) திருமதி. அனுஷா, க/பெ. மணிகண்டன், 3/1.எப். பொட்டல், பர்னட்டிவிளை, குளச்சல்.
4) திருமதி. ஜெயா, 3/1.எச், பொட்டல், பொட்டல், பர்னட்டிவிளை, குளச்சல்.
5) திருமதி. கமலாபாய், க/பெ. சுயம்பு, 3/1.எல். பொட்டல், பர்னட்டிவிளை, குளச்சல்.

எனவே மேற்படி 14 நபர்களுக்கும், அவர்கள் குடிசைகள் அமைந்துள்ள பகுதிக்குள் வீட்டுமனை பட்டா வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 669 : ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 17**

**நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்**

கொட்டில்பாடு ஆர்.சி. தேவாலயப் பகுதியிலும், கொட்டில்பாடு கிழக்கு பகுதியிலும் இரண்டு சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன. 2004–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26ம் நாள் சுனாமி பேரழிவினால் ஏற்பட்டுள்ள அச்சம் காரணமாக மேற்படி சத்துணவு மையங்களில் குழந்தைகள் சென்று படிப்பதற்கு அஞ்சுகின்ற காரணத்தினால் மேற்படி சத்துணவு மையங்களை சுனாமியால் பாதிக்கப்பட்ட கொட்டில்பாடு பகுதி மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ள கே.எஸ்.எஸ்.எஸ். நகர் பகுதிகளில் புதிய கட்டிடங்கள் கட்டி சத்துணவு மையங்கள் அமைப்பதற்கு அப்பகுதி குழந்தைகளின் பெற்றோர்கள் வேண்டுதல் விடுத்துள்ளனர். எனவே கே.எஸ்.எஸ்.எஸ். நகர் பகுதியில் குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான இடங்களில் மேற்படி சத்துணவு மையங்களை கட்டிட நடவடிக்கை எடுத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

**அ,குறிப்பு** : மேற்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் மேற்படி அங்கன்வாடி மையங்கள் அமைப்பதற்கு நகராட்சி நில அளவையர் மூலம் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பகுதிகளில் நாடாளுமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நிதி உதவி கோரி மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம்** : அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் எண். 670 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 18**

**குளச்சல் நகராட்சி 10–ம் வார்டு நகர்மன்ற உறுப்பினர் கொண்டு வரும் தீர்மானம்**

குளச்சல் துறைமுகத்தெருவில் கதவு எண். 17/26 முதல் கதவு எண். 17/22 வரையிலான ஆறு வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் திறந்த வெளியில் செல்வதனால் மிகப்பெரிய சுகாதாரக்கேடு ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை கழிவுநீர் ஓடை கட்டி மேல்மூடி அமைத்து ஏ.வி.எம். கால்வாய் ஓரமாக செல்லும் பெரிய கழிவுநீர் ஓடையில் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிட மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 671 : ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி